**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 284/2017**

2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 28.07.2025 | தகப்பனார் பெயர்: | கோவிந்தராஜன் |
| பெயர்: | பாலமுரளி<br>(DW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நாங்கூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 55/2025 |

<u>**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 28.07.2025**</u>

1. நான் பெட்ரோல் பங்க் வைத்துள்ளேனா என்றால் இல்லை எனது மனைவி பெயரில் உள்ளது. அதன் நிர்வாகத்தை எனது மனைவி கவனித்து வருகிறார். தாவா வழக்கிற்கு என்னுடைய கட்சியை நான் கடந்த 08.03.2018 அன்று தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ. 1 மற்றும் பி.வா.சா.ஆ.2 VAO கையெழுத்து செய்தது, 28.08.2017 என்றாலும், மண்டல துணை வட்டாச்சியர் கைழுத்து செய்தது 29.08.2017 என்றாலும் சரிதான். இந்த வழக்கில் எனக்கு எதிராக இடைகால உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றது 26.07.2018 என்றால் சரிதான். எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவின் மேல் நான் எவ்வித மேல் முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 வழங்கப்பட்ட தேதியில் இருந்து சுமார் 5 மாதங்கள் கழித்துதான் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன்என்றால் சரிதான்.

2. இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவில் எனது தரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் எனக்கு கிடைத்த பிறகு சுமார் 5 மாதங்கள் கழித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ததற்கு காரணம் உண்டா என்றால் முதல் வாதியுடன் ஊரில் விவசாய சங்க தலைவர் மூலமாக பஞ்சாயத்து பேசப்பட்டது அதன் காரணத்தினால் தாமதம் ஆனது. பஞ்சாயத்து பேசபப்ட்டது சம்மந்தமாக நான் எனது எதிர் வழக்குரையிலேயோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலேயோ சொல்லவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்து உண்மையில் நடந்திருந்தால்நான் எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கூறியிறுப்பேன் என்றும், அவ்வாறு நடக்கவில்லை என்பதால் நான் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல.

3. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் எனது தனிப்பட்ட செல்வாக்கால் நேர்மையின்றி முன் தேதியிட்டு பெறப்பட்டது அதனால்தான் நான் எனது எதிர்வழக்குரையிலும் மற்றும் இடைமனு விசாரணையிலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 3-ம் பக்கம் 3-வது பாராவில் நான் இந்த வழக்கில் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றும்,அதனை வழக்கின் ஒரு பாகமாக ஏற்கவேண்டும் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4 என்றால் சரிதான். வா.சா.ஆ.4 -ன் சொத்து விபரத்தில் சர்வே எண்.190/1-ல் 1.30.0 ஏர்ஸ் சொத்து என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னிடம் இருப்பது 1 ஏக்கர், 17 செண்ட்டு மட்டுமே. எனது பதில் அறிவிப்பிலும், என்னுடைய எதிர் வழக்குரையிலும் ஒரே நான்கெல்லைதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. 1 ஹெ 30 ஏர்ஸ் என்பது 321 செண்ட் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் சொத்து விபரத்தில் 1 ஏக்கர் 17 செண்ட்டு என்றும், ஆனால் அறிவிப்பில் 321 செண்ட் என சொல்லி இரண்டிற்கும் ஒரே நான்கெல்லையை தான் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதி எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வாதி

சர்வே எண்.190/1, 190/3, 193/6 என்ற மூன்று அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் அனைத்தும் நாங்கூர் புருஷோத்தம்ம கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளின் தகப்பனார் பெயரில்தான் குத்தகை உரிமை பதிவேடு உள்ளது என்றால் சரிதான்.

4. நான் எனது எதிர்வழக்குரையிலும் வாதியின் தகப்பனார் RTR பதிவை எனது தகப்பனார் பெயரில் மாற்றி தரவில்லை என கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 1–வது அயிட்ட சொத்திற்கு மட்டுமே நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். தாவா 1–வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர், 34 செண்ட் என்று வாதி தரப்பில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 1–வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் தவறு என்பதற்கு நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் சட்டதிற்கு புறம்பாக பெறப்பட்டது என்பதால் அதன் மூலம் நான் எவ்வித உரிமை மூலமும் கோர இயலாது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களுக்கு நான் கோயிலுக்கு பகுதி செலுத்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆணங்களில் எந்த ஆவணம் நான் குத்தகை செலுத்திய ரசீது என்றால் எதுவும் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 தாவா சொத்துக்களுக்கான குத்தகை ரசீது என்றால் சரிதான். அதன் தேதி 02.03.2017 என்றால் சரிதான். அதில் வருவாய் நீதிமன்ற P.No.354/2012 தீர்ப்பு தொகை பசலி 1411 முதல் 1420 வரையிலான தொகை முழுவதும் வரவு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் செலுத்திய தொகையாக ரூ.52,096/– என்றால் சரிதான். வா.சா.ஆ.1 என்பது P.No.354/2012 என்றும் அதில் மனுதாரர் புருஷோத்தம்ம கோயில் என்றும், எதிர்மனுதாரர்களாக 1. கண்ணன், 2. பாலு, 3. பன்னீர்செல்வம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். வா.சா.ஆ.1 அனுசரித்துதான் வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டது என்றால் நான் பணம் கொடுத்துதான் பணம் கட்டப்பட்டது.

6. மேற்படி பணம் செலத்திய விபரத்தை எனது எதிர்வழக்குரையிலேயோ, நிரூபண வாக்குமூலத்திலேயோ கூறப்படவில்லை என்றால் சரிதான். வழக்கிற்ககா நான் பணம் செலுத்தினேன் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் கோவில் நிர்வாகத்திடமிருந்து 1–ம் வாதி கண்ணனுக்கு அனுப்பபட்ட அறிவிப்பு என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் இன்று வரை வாதிகளின் வசத்தில் தான் இருப்பதால்தான் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எந்த காலத்திலும் எனது வசத்தில் இல்லை அதனால்தான் நான் குத்தகை சம்மந்தமாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் 1–வது அயிட்ட சொத்தை நான் எதன் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் வா.சா.1 ஆனவர் எனது தகப்பனாரிடம் தனது மகள் திருமணத்திற்காக அவரது பகுதியை விற்றுவிட்டு பணம் பெற்றுக்கொண்டார் அதன் அடிப்படையில் நான் உரிமை கோருகிறேன். தற்போது சாட்சி 2005–ம் வருடம் பணம் கொடுத்து பெறப்பட்டது என்று கூறுகிறார்.

7. 2005–ம் வருடம் பணம் கொடுத்ததை உறுதி படுத்தும்விதமாக நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் வாதிகளின் வசத்தில்தான் இதுநாள் வரை உள்ளது அதனை நான் உள் குத்தகைக்கு விட வேண்டும் என கேட்டுக்கொண்டு அதை வாதி மறுத்த காரணத்தினால்தான் இந்த வழக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித அனுபவமும் இல்லை என்பதால் தான் இன்நாள் வரையில் இடைமனுவின் மீது நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல அனுபவம் என்னிடம் தான் உள்ளது. தாவாப்படி தீர்பாக வேண்டும் என்றால்சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டத்திற்கு புறம்பாக பெறப்பட்ட காரணத்தினால் எவ்வித அனுகூலமும் அதன் மூலம் நான் பெற இயலாது என்றால் சரியல்ல. தாவா 1–வது அயிட்ட சொத்து என்னிடம் இல்லை அதனால்தான் வா.சா.ஆ.4–ல் ஒரு

விஸ்தீரணமும், எனது எதிர்வழக்குரையில் ஒரு விஸ்தீரணமும் மாறி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**